**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 திருச்சிராப்பள்ளி**
**முன்னிலை : திருமதி.M.அனுசுருதி, B.A.,B.L.,(Hons)**
**நீதித்துறை நடுவர் எண்.1, திருச்சிராப்பள்ளி**
**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக் கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.15/2022**

அரசுக்காக காவல் ஆய்வாளர்
வடக்குப்போக்குவரத்து புலனாய்வு பிரிவு
காவல் நிலையம்
குற்ற எண்.73/2021 . . . குற்றமுறையிடுபவர்

/எதிர்/

மணிகண்டன் (வயது 39/2026),
த/பெ.லிங்கம்,
எண்.6,/62–2, கிழக்கு தெரு,
சிவநாடானூர், கல்லூரனி,
தென்காசி, திருநெல்வேலி. . . . எதிரி

**வழக்கின் சுருக்கம்**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்ட தேதி | 29.04.2021 | | |
| 2. | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 22.06.2021 | | |
| 3. | எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்ட தேதி | 24.03.2022 | | |
| 4. | குற்றப்பல்வகை மனுக்களின் விபரம் | --- | | |
| 5. | சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதி | முதல் விசாரணை – குறுக்கு விசாரணை | | |
| | | அ.த.சா.1 | 20.04.2022 | 20.04.2022 |
| | | அ.த.சா.2 | 20.04.2022 | 20.04.2022 |
| | | அ.த.சா.3 | 20.04.2022 | 20.04.2022 |
| | | அ.த.சா.4 | 20.04.2022 | 20.04.2022 |
| | | அ.த.சா.5 | 20.04.2022 | 20.04.2022 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.த.சா.6 | 20.04.2022 | 20.04.2022 |
| | | அ.த.சா.7 | 20.04.2022 | 20.04.2022 |
| | | அ.த.சா.8 | 02.06.2022 | 02.06.2022 |
| | | அ.த.சா.9 | 24.09.2025 | 24.09.2025 |
| | | அ.த.சா.10 | 04.02.2026 | – |
| | | அ.த.சா.11 | 18.02.2026 | 18.02.2026 |
| | | அ.த.சா.12 | 01.04.2026 | 01.04.2026 |
| | | அ.த.சா.13 | 20.05.2026 | 20.05.2026 |
| | | அ.த.சா.14 | 03.06.2026 | 03.06.2026 |
| | | அ.த.சா.15 | 29.06.2026 | 29.06.2026 |
| 6. | எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் வினவப்பட்ட தேதி | 03.08.2026 | | |
| 7. | தலைமறைவு எதிரிகள் | இல்லை | | |
| 8. | இவ்வழக்கில் மேல் நீதிமன்றத்தில் ஏதேனும் தடை உத்தரவு பற்றிய விபரம் | இல்லை | | |

இவ்வழக்கு 06.01.2022 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மோகன் அவர்கள் ஆஜராகியும், 12.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

கடந்த 27.04.2021ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன சார்லசும் அவரது மகள் ரோஸிலின் அன்னாலும் TN 81 X 5803 என்ற பேஷன் புரோ இருசக்கர வாகனத்தில் மாலை சுமார் 4.00 மணிக்கு ஓயாமாரி ரோட்டின் வடக்கிலிருந்து தெற்காக வந்து இவ்வழக்கின் சம்பவ இடமான சஞ்சீவி நகர் ஜங்சனில் திருச்சி – சென்னை பைபாஸ் சாலையை மேற்கிலிருந்து கிழக்காக கடக்க சாலையின் இடது ஓரமாக காத்திருந்தபோது, இவ்வழக்கின் எதிரி TN 02 BT 8347 AVK என்ற எண்ணுள்ள ஆம்னி

பஸ்ஸை பொது மக்கள் மற்றும் வாகனங்கள் கடந்து சென்று வரும் சாலை என்று தெரிந்தும், விபத்து பகுதி என்பதால் என்தால் மெதுவாக செல்வதற்காக பேரிகார்டில் ரிப்ளக்ட் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தும், வாகன ஓட்டிகள் கவனித்து செல்ல வேண்டிய மஞ்சள் நிற விளக்கு எரிந்து கொண்டிருந்த நிலையிலும், மாநகர எல்லைக்குள் 40 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டும் என விதிமுறைகள் தெரிந்தும் எதிரி மணிகண்டன் மேற்படி ஆம்னி பஸ்ஸை மனிதர்கள் மீது மோதினால் உடற்காயம் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும் என தெரிந்தே சாலை விதிமுறைகளை கடைபிடிக்காமல் அசட்டையாகவும் அதிகவேகமாகவும் ஓட்டி வந்து TN 81 X 5803 என்ற எண்ணுள்ள டூவீலருடன் நின்றிருந்த சார்லஸ் மற்றும் அவரது மகள் ரோஸ்லின் அன்னாள் மீது மோதி ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு வலது காலில் பலத்த கொடுங்காயத்தையும், சார்லஸ்க்கு இறப்புக்கு காரணமாக இருந்துள்ளதாகவும், எனவே எதிரியின் இச்செய்கையானது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) இதச பிரிவுகளின் கீழாக தண்டிக்கத்தக்கக் குற்றம் புரிந்ததாக வடக்குப் போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது :</u>**

குற்றப்பத்திரிக்கை மற்றும் இதர ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி, இவ்வழக்கானது கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வழக்கு எண் வழங்கப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி அதன் மூலம் நீதிமன்றத்தில் ஆஜரானார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் வைப்பதற்கு வசதி உண்டு என்று கூறினார். எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207இன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>3) குற்றச்சாட்டு வனைதல் :</u>**

கு.வி.மு.ச பிரிவு 173 இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை, அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, ஒரு

சந்தர்ப்பமும் எதிரிக்கு அளிக்கப்பட்டு, இரு தரப்பும் கேட்கப்பட்டு, தகுந்த ஆதாரங்கள் மற்றும் நம்புவதற்கு காரணங்கள் இருப்பதனால் எதிரி மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) இதச பிரிவுகளின் கீழ் குற்றம் வனையப்பட்டு, குற்றம் பற்றி வினவியபொழுதும் எதிரி பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் கூறினார். எனவே தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

**4) அரசுதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :**

இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.த.சா.1 முதல் அ.த.சா.15 வரையானவர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 22 வரையானவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) **அரசு தரப்பு வழக்கின் சாட்சிகள் மற்றும் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

5.1) **அ.த.சா.1 வின்செண்ட் பால்ராஜ்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது துவாக்குடி மலையில் வசித்து வருவதாகவும், தான் டெய்லர் வேலை செய்து வருவதாகவும், வழக்கின் விபத்து சம்பவத்தில் இறந்துபோன சார்லஸ் தன்னுடைய அண்ணன் என்றும், கடந்த 27.04.2021 அன்று மாம்பழச்சாலையில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு தானும் தனது நண்பர் ஆண்டனிதுரை என்பவரும் ஒரு இருசக்கர வாகனத்திலும், தனது அண்ணன் சார்லஸ்ம் அவரது மகள் ரோஸி அன்னாள் என்பவரும் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்று பிரார்த்தனை செய்துவிட்டு திரும்ப வீட்டிற்கு சென்றபோது, ஓயாமாரி சர்வீஸ் ரோட்டில் தனது அண்ணனும், அண்ணன் மகளும் தங்ளுக்கு முன்னால் இரு சக்கர வாகனத்திலும், தானும், தனது நண்பரும் அவர்களுக்கு பின்னால் இருசக்கர வாகனத்திலும் சென்று சஞ்சீவி நகர் அருகே ரோட்டை கடப்பதற்காக சாலையின் வலதுபுறமிருந்து எதிர் திசைக்கு கடக்க நால்ரோடு பிரிவு ரோட்டில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது ஆம்னி பேருந்து சென்னைக்கு செல்வதற்காக சென்னை நோக்கி வேகமாக தடுப்பு இருக்கும் இடத்தில் நிற்காமல் வேகமாக வந்து தனது அண்ணனின் வாகனத்தின் முன்புறம் மோதி விபத்து

ஏற்பட்டது என்றும், தனது அண்ணனும் அவரது மகளும் பேருந்து இடித்தவுடன் தனது அண்ணனுக்கு கைகால், மூக்கு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது என்றும், அண்ணன் மகளுக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்படுத்தியவுடன் அந்த பேருந்து நின்றது என்றும், அந்த பேருந்தின் பதிவெண் TN 02 8347 என்றிருந்ததாகவும், அந்த பேருந்தை ஓட்டிய நபரை விபத்து சமயத்தில் தான் பார்த்ததாகவும்,அவருடைய பெயர் மணகண்டன் என்று தெரிந்துகொண்டதாகவும், அவரை தற்போது பார்த்தால் தன்னால் அடையாளம் சொல்ல இயலும் என்றும், அவர் ஆஜர் எதிரிதான் என்றும், விபத்தில் காயம்பட்ட தனது அண்ணனை திருச்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், திருச்சி அரசு மருத்இதுவமனை மருத்துவர் தனது அண்ணன் சார்லஸ்ஐ பரிசோதித்து விட்டு அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் சொன்னதாகவும், விபத்து தொடர்பாக திருச்சி மாநகர வடக்கு போக்குவரத்து விசாரணை பிரிவில் புகார் அளித்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் அளித்தது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.2) **அ.த.சா.2 ஜோபிராங்கிளின் அன்னாள்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது வடக்கு துவாக்குடி மலையில் வசித்து வருவதாகவும், வீட்டுக்குடித்தனமாக இருந்து வருவதாகவும், இந்த வழக்கின் விபத்து சம்பவத்தில் இறந்துபோன சார்லஸ் தனது கணவர் என்றும், விபத்தில் காயம்பட்ட ரோஸி அன்னாள் தனது மகள் என்றும், கடந்த 27.04.2021 அன்று தனது கணவர் சார்லஸ்ம் தனது மகள் ரோஸி அன்னாளும் மாம்பழச்சாலையில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு பிரார்த்தனை செய்வதற்காக இருசக்கர வாகனத்தில் சென்றார்கள் என்றும், அவர்களுடன் தனது கொழுந்தனாரான அ.த.சா.1ம் அந்தோணி துரைராஜ் என்பவரும், மற்றோரு இருசக்கர வாகனத்தில் சென்றார்கள் என்றும், அன்றையதினம் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் தான் வீட்டில் இருந்ததாகவும், அன்றையதினம் மாலை 04.30 மணியளவில் ஓயாமாரி சர்வீஸ் சாலையிலிருந்து தேசிய நெடுஞ்சாலையை கடக்க நின்று கொண்டிருந்தபோது,

சென்னையை நோக்கி வந்த ஆம்னி பேருந்து ஒன்று தனது கணவரின் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் தனது மகள் தூக்கி எறியப்பட்டு வலது காதில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் ஆம்னி பேருந்தின் டயர் தனது கணவரின் நெஞ்சில் பேருந்தின் இடதுபுற சக்கரம் ஏறி விபத்து ஏற்பட்டதாகவும், தனது கணவரை திருச்சி அரசு மருத்துவமனைக்கு ஆமபுலன்ஸ் மூலம் அனுப்பிவைத்ததாகவும், காயம்பட்ட தனது மகளை அட்லஸ் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்ததாகவும், கிடைத்த தகவலின் பேரில் திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று தனது கணவரை பார்த்தபோது, அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொல்லி அவரது பிரேதத்தை சவக்கிடங்கிற்கு மருத்துவர்கள் அனுப்பிவிட்டார்கள் என்றும், தனது மகள் அட்லஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றும், இது சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.3) **அ.த.சா.3 அந்தோணிதுரை** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது துவாக்குடி மலையில் வசித்து வருவதாகவும், தான் ஹோட்டல் மேனேஜ்மேன்ட் படிப்பை முடித்துவிட்டு ஹோட்டலில் வேலை செய்து வருவதாகவும், வழக்கின் விபத்து சம்பவதில் இறந்துபோன சார்லஸ்ஐ தனக்கு தெரியும் என்றும், கடந்த 27.04.2021 அன்று மாம்பழக்சாலையில் உள்ள அந்தோணியார் கிறிஸ்தவ ஆலயத்திற்கு தானும், அ.த.சா.1ம் ஒரு இருசக்கர வாகனத்திலும், சார்லஸ்ம் அவரது மகள் ரோஸி அன்னாள் என்பவரும் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்று பிரார்த்தனை செய்துவிட்டு திரும்ப வீட்டிற்கு சென்றபோது, ஓயாமாரி சர்வீஸ் ரோட்டில் சார்லஸ்ம் அவரது மகளும், தங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்திலும், தானும், அ.த.சா.1ம் அவர்களுக்கு பின்னால் இருசக்கர வாகனத்திலும், சென்று சஞ்சீவி நகர் அருகே ரோட்டை கடப்பதற்காக சாலையின் வலதுபுறமிருந்து எதிர்திசைக்கு கடக்க நால்ரோடு பிரிவு ரோட்டில் மாலை 04.30 மணியளவில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது ஆம்னி பேருந்து சென்னைக்கு செல்வதற்காக சென்னை நோக்கி வேகமாக தடுப்பு இருக்கும் இடத்தில் நிற்காமல் வேகமாக வந்து சார்லஸ்ன் வாகனத்தின் முன்புறம் மோதி விபத்து

ஏற்பட்டது என்றும், சார்லஸ்ம் அவரது மகளும், பேருந்து இடித்தவுடன் சார்லஸ்ஐ அந்த பேருந்து சிறிது தூரம் இழுத்து சென்றது என்றும், அதில் அவருக்கு இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டது என்றும், காதிலும், மூக்கிலும் காயம் ஏற்பட்டது என்றும், அவரது மகளுக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது என்றும், விபத்து ஏற்படுத்தியவுடன் அந்த பேருந்து நின்றது என்றும், அந்த பேருந்தின் பதிவெண் TN 02 BT 8347 என்றிருந்தது என்றும், அந்த பேருந்தை ஓட்டிய நபரை விபத்து சமயத்தில் தான் பார்த்ததாகவும், அவருடைய பெயர் மணிகண்டன் என்று தெரிந்து கொண்டதாகவும், ஆஜர் எதிரிதான் என்றும், விபத்தில் காயம்பட்ட சார்லஸ்ஐ திருச்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்ததாகவும், விபத்தில் காயம்பட்ட சார்லஸ்ன் மகளை ஆம்புலன்ஸ் மூலம் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் சார்லஸ் பரிசோதித்துவிட்டு அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள்.

5.4) **அ.த.சா.4 ஜான்பீட்டர்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது துவாக்குடி மலையில் வசித்து வருவதாகவும், மார்கெட்டிங் வேலை செய்து வருவதாகவும், வழக்கின் விபத்தில் இறந்துபோன சார்லஸ் தனது அண்ணன் என்றும், கடந்த 27.04.2021 அன்று மாலை 04.40 மணியளவில் மாம்பழச்சாலையில் உள்ள அந்தோணியார் கிறித்தவ ஆலயத்திற்கு சென்றுவிட்டு ஓயாமாரி சாலையில் நாகநாதர் டீஸ்டால் அருகில் சாலையை கடப்பதற்காக இருசக்கர வாகனத்தில் நின்றுகொண்டிருந்தபோது, திருச்சி – சென்னை செல்லும் ஏவிகே பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் தனது அண்ணன் சார்லஸ்ன் மகளுக்கு காலில் காயம் ஏற்பட்டதாகவும், அவரை சிகிச்சைக்காக அட்லஸ் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், காயம்பட்ட தனது அண்ணன் சார்லஸ்ஐ திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், தகவல் தெரிந்து திருச்சி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது, தனது அண்ணன் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொல்லி அரவது பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்துவிட்டார்கள்

என்றும், மறுநாள் காலையில் சவக்கிடங்கில் போலிசார் விசாரணை செய்தபோது, தானும் உடனிருந்ததாகவும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.5) **அ.த.சா.5 ரோஸ்லின் அன்னாள்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது துவாக்குடி மலையில் வசித்து வருவதாகவும், பிஎஸ்சி படித்து வருவதாகவும், வழக்கின் விபத்தில் இறந்துபோன சார்லஸ் தனது அப்பா என்றும், கடந்த 27.04.2021 அன்று மாலை 04.30 மணியளவில் தானும், தனது அப்பாவும் மாம்பழச்சாலையில் உள்ள அந்தோணியார் ஆலயத்திற்கு பிரார்த்தனை செய்ய இருசக்கர வாகனத்தில் சென்று பிரார்த்தனை செய்துவிட்டு தானும், தனது அப்பாவும், ஒரு இருசக்கர வாகனத்திலும், வின்செண்ட் பால்ராஜ், அந்தோணி துரைராஜ் ஆகிய இருவரும் மற்றொரு இருசக்கர வாகனத்திலும், தானும், அப்பாவும், முன்னே செல்ல அவர்கள் தங்களுக்கு பின்னால் வந்துகொண்டிருந்ததாகவும், தனது அப்பா வாகனத்தை ஓட்டினார் என்றும், தான் பின்னால் அமர்ந்து சென்று தாங்கள் சஞ்சீவி நகர் அருகில் சாலையை கடப்பதற்கு நின்றுகொண்டிருந்தபோது, ஏவிகே என்ற டூரிஸ்ட் பேருந்து சென்னை நோக்கி வேகமாக வந்து தங்கள் வாகனத்தில் மோதி தனது அப்பாவை இழுத்துகொண்டு சிறிது தூரம் சென்றது என்றும், தான் கீழே விழுந்ததில் தனக்கு வலது கால் மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டது என்றும், தான் கீழே விழுந்ததில் காலில் அடிப்பட்டதால் தன்னால் எழுந்து நிற்க இயலவில்லை என்றும், விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்திய பேருந்தின் பதிவேண்–ஐ பார்த்ததாகவும், TN 02 BT 8347 என்றிருத்தாகவும், AVK டூரிஸ்ட் பஸ் என்று எழுதியிருந்ததாகவும், அந்த பேருந்தை ஓட்டிய நபரை தான் பார்த்ததாகவும், அவருடைய பெயர் மணிகண்டன் என்று தெரிந்துகொண்டதாகவும் , அவர் ஆஜர் எதிரிதான் என்றும் காயம்பட்ட தன்னை சிகிச்சைக்காக அட்லஸ் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தார்கள் என்றும், அந்த விபத்தில் தனது அப்பாவிற்கு உடல்முழுவதும் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அவரது கை நஞ்சிருந்ததாகவும், அவரை ஆம்புலன்ஸ் மூலம் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், தான் சிகிச்சையில் இருந்ததால் அறுவை சிகிச்சை தனக்கு செய்யவேண்டும் என்பதாலும் தனது அப்பா இறந்த விபரத்தை தன்னிடம் யாரும் தெரிவிக்கவில்லை என்றும், ஒருவாரம் கழித்துதான் தனது அப்பா இறந்துவிட்ட

தகவல் தனக்கு தெரியும் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.6) **அ.த.சா.6 தாமஸ்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது துவாக்குடி மலையில் வசித்து வருவதாகவும், தான் BHEL கான்ட்ராக்ட் பணி செய்து வருவதாகவும், வழக்கின் விபத்து சம்பவத்தில் இறந்துபோன சார்லஸ் தனது தம்பி என்றும், காயம்பட்ட ரோஸ்லின் அன்னாள் தனது தம்பி மகள் என்றும், கடந்த 27.04.2021 அன்று தனது அண்ணன் சார்லஸ்ம் அவரது மகளும் மாம்பழச்சாலையில் உள்ள அந்தோணியார் ஆலயத்திற்கு சென்றுவிட்டு மாலை 04.30 மணிக்கு சஞ்சீலி நகர் அருகில் தேசிய நெடுஞ்சாலையை கடக்க நின்றபோது, சென்னை நோக்கி சென்ற ஆம்னி பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் காயம்பட்ட அண்ணன் மகளை அட்லஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்ததாகவும், காயம்பட்ட தனது அண்ணன் சார்லஸ் ஐ அரசு மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளதாகவும், தகவல் தெரிந்து திருச்சி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது, அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் தன்னுடையதுதான் என்றும், தான் விபத்து நடந்த தனது அண்ணனின் வாகனத்தின் ஆவணங்களை போலிசார் கேட்டதால் தான் அந்த ஆவணங்களை எடுத்து சென்று திருச்சி மாநகர வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் கொடுத்ததாகவும், அப்போது போலிசார் விபத்து ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் மணகண்டனை போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது தன்னிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றார்கள் என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.7) **அ.த.சா.7 ஆரோக்கிய ஜான்பீட்டர்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது தீராம்பட்டியில் வசித்து வருவதாகவும், இளநிலை உதவியாளராக பணி செய்து வருவதாகவும், வழக்கின் விபத்து சம்பவத்தில் இறந்துபோன சார்லஸ் தனது மாமனாரின் தம்பி என்றும், காயம்பட்ட ரோஸ்லின் அன்னாள் அவரது மகள் என்றும், கடந்த

27.04.2021 அன்று சார்லஸ்ம் அவரது மகளும் மாமபழச்சாலையில் உள்ள அந்தோணியார் ஆலயத்திற்குசென்றுவிட்டு மாலை 04.30 மணிக்கு சஞ்சீவி நகர் அருகில் தேசிய நெடுஞ்சாலையை கடக்க நின்றபோது, சென்னை நோக்கி சென்ற ஆம்னி பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் காயம்பட்ட சார்லஸ்ன் மகளை அட்லஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைகைக்காக அனுப்பியுள்ளதாகவும், தகவல் தெரிந்து திருச்சி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது, அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும், தான் விபத்து நடந்த சார்லஸ்ன் வாகனத்தின் ஆவணங்களை போலிசார் கேட்டதால் தான் அந்த ஆவணங்களை எடுத்து சென்று திருச்சி மாநகர வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் தானும், தனது மாமனாரும் கொடுத்ததாகவும், அப்போது போலிசார் விபத்து ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் மணிகண்டனை போலிசார் விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது தன்னிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றார்கள் என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.8) **அ.த.சா.8 உமாசாங்கரி** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி கன்டோன்மென்ட் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் தனிப்படை காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருவதாகவும், கடந்த 27.04.2021 அன்று தான் திருச்சி மாநகர வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, இன்னாசி மகன் வின்சென்ட் பவுல்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.73/2021, ச/பி.279, 337, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்பு வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாகவும், இதுதொடர்பாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.9) **அ.த.சா.9 சரவணன்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி, பெருகமணியில் வசித்து கூலி வேலை செய்து வருவதாகவும், சுமார் நான்கு ஐந்து வருங்களுக்கு முன்பு, சஞ்சீவி நகர் பைபாஸ் ரோட்டில் மாலை 04.30 மணிபோல வந்து கொண்டிருந்தபோது, அங்கு கும்பலாக இருந்ததை பார்த்து, அங்கு சென்று பார்த்தபோது, அங்கு விபத்து நடந்திருந்ததாகவும், விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபரை ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள் என்றும், போலிசார் எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், தான் செய்து கொடுத்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.10) **அ.த.சா.10 கனகஸ்ரீ** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சி கி.ஆ.பெ.வி. அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் உடலியங்கியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 28.04.2021 அன்று மேற்படி மருத்தவமனை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த துறையில் போதகராக பணியில் இருந்தபோது, திருச்சி வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையக் குற்ற எண்.73/2021 என்ற வழக்கில் சம்பந்தப்பட்டு, இறந்துபோன 50 வயது மதிக்கத்தக்க சார்லஸ் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று, தலைமைக் காவலர் HC 484 P.பாரதிராஜா என்பவர் பிரேதத்தை அடையாளம் காண்பிக்க, அதன் அங்க மச்ச அடையாளங்களை குறித்துக் கொண்டு, அதே தினம் முற்பகல் 11.50 மணிக்கு, பிரேத பரிசோதனையை துவங்கினேன். அதன் விபரங்கள் பின்வருமாறு : பிரேதத்தின் வெளிப்புற தோற்றம் : நடுத்தர உடல்வாகு உடைய 50 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தில், பிரேத விரைப்புத் தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. உடலானது, குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டிருந்தது. பிரேதத்தின் இடது காதில் இருந்து இரத்தக்கறை காணப்பட்டது என்றும், பிரேதத்தில் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள்:

1. சிவப்பு, பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள் கீழ்கண்ட இடங்களில் காணப்பட்டது என்றும், – 3 x 2 cm அளவில் வலது நெற்றியில் – 9 x 5 cm அளவில் இடது கண்ணத்தில் – 21 x

0.5 cm அளவில் வலது காலின் வெளிப்பக்கத்தின் நடுவில் – 3 x 2 cm அளவில் வலது முட்டியில் – 10 x 5 cm அளவில் இடது காலின் நடுப்பகுதியில் என்றும், நசுங்கிய கிழிந்த காயங்கள் கீழ்கண்ட இடங்களில் காணப்பட்டது என்றும், – 12 x 4 cm அளவில் வலது கை மற்றும் மார்பு பகுதியில் – 15 x 6 cm அளவில் வலது கை கீழ் பகுதியில்– 16 x 7 cm அளவில் வலது முன் கையின் மேல்புறத்தில் மேற்சொன்ன காயங்களின் அடியில் உள்ள எலும்புகளில் பலதரப்பட்ட எலும்பு முறிவுகள் ரத்தக்கசிவுடன் காணப்பட்டது என்றும், தோலானது பிரிந்து, அடியில் உள்ள எலும்புகள், தசைகள், ரத்த நாளங்கள் மற்றும் நரம்புகள் தெரிந்தன என்றும், நசுங்கிய கிழிந்த காயம் இடது கையில் 59 x 9 செ.மீ அளவில் காணப்பட்டது. அதன் மூட்டு காணவில்லை என்றும், அதன் எலும்புகள் நசுங்கி, பலதரப்பட்ட இடங்களில் முறிவுடன் காணப்பட்டது. தோலானது பிரிந்து, ரத்தக் கசிவுடன் காணப்பட்டது என்றும், நான்கு நேரான சிவந்த பழுப்பு நிற அழுத்த சிராய்ப்பு அடையாளம் (Suggestive of Tyre Mark) 22 செ.மீ முதல் 18x1 செ.மீ வரை அதனிடையே 5 செ.மீ இடைவெளியுடன், நெஞ்சு, கழுத்து, முன் தாடையில் காணப்பட்டது என்றும், காயத்தை கூறாய்வு செய்ததில்,– நசுங்கிய எலும்பு முறிவு வலது பக்க கீழ் தாடையில் ரத்தக் கசிவுடன் காணப்பட்டது என்றும், – அனைத்து விலா எலும்புகளும், நெஞ்சு எலும்பும் நசுங்கி, எலும்பு முறிவுடன் ரத்தக்கசிவுடன் காணப்பட்டது என்றும்,– குரல்வளை மற்றும் மூச்சுக் குழாய் நசுங்கி, கன்றியக் காயத்துடன், ரத்தக்கசிவுடன் காணப்பட்டது என்றும்,– C1, C6, C7 and D1 முதுகு எலும்புகள் நசுங்கி ரத்தக்காயத்துடன், அதன் அடியில் உள்ள தண்டுவடம் கிழிந்தும் காணப்பட்டது என்றும், தலையை கூறாய்வு செய்ததில்,– 12 x 7 cm அளவில் சிவந்த கன்றியக் காயம் இடதுபக்க தலைத்தோல் அடியில் காணப்பட்டது என்றும், 12 cm அளவில் சாய்ந்த எலும்பு முறிவு இடது பக்கவாடு மற்றும் பின் தலை எலும்பிலும், 13 செ.மீ அளவில் நடு கபாலக் குழி வரை நீண்டும், 14 செ.மீ அளவில் இடது கீழ் கபாலக் குழி வரையிலும் காணப்பட்டது என்றும், பரவலாக, மூளைச் சவ்வில் ரத்தக் கசிவு காணப்பட்டது என்றும், மூளையானது மிருதுவாகம், வீங்கியும் காணப்பட்டது என்றும், மற்ற விபரங்கள் : நெஞ்சுக் கூட்டை கூறாய்வு செய்ததில், அதன் உள்ளே 900 மி.லி. ரத்தம் இருந்தது. இருதயம் இயல்பு நிலையில் இருந்தது என்றும், இருதய அறைகள்

காலியாக இருந்தன என்றும், இருதய ரத்த நாளங்கள் இயல்பாக இருந்தன என்றும், இரு நுரையீரல்களிலும், பல இடங்களில் கன்றியக் காயமும், குத்துப்பட்ட காயங்களும் ரத்தக் கசிவுடன் காணப்பட்டது என்றும், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பாக இருந்தன என்றும், அதை கூறாய்வு செய்ததில், சிறிதளவு ரத்தம் கசிந்தது என்றும், இரைப்பை இயல்பாக இருந்தது என்றும், அதன் உள்ளே 100 கிராம் அளவில் பாதி செரிமானம் ஆன மஞ்சள் நிற அரிசி உணவு இருந்தது என்றும், குறிப்பிடத்தக்க எந்த நெடியும் இல்லை என்றும், அதன் சிலேடும படலம் இயல்பாக இருந்தது என்றும், சிறு குடலில் 20 மி.லி அளவில் மஞ்சள் நிற திரவம் இருந்தது என்றும், குறிப்பிடத்தக்க எந்த நெடியும் இல்லை என்றும், அதன் சிலேடும படலம் இயல்பாக இருந்தது என்றும், பெருங்குடலில் மலம் இருந்தது என்றும், சிறுநீர் பை காலியாக இருந்தது என்றும், இடுப்பு எலும்பு இயல்பாக இருந்தது என்றும், இறுதி கருத்து : இறந்த நபரானவர், அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களினால் இறந்திருக்கக் கூடும் என்று சான்று வழங்கினதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் 28.04.2021 தேதியிட்ட PM.No.689/2021 என்ற சார்லஸ் என்பவருக்கு தான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.11) **அ.த.சா.11 சத்தியமூர்த்தி** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சியில் வசித்து, சொந்தமாக ஆம்புலன்ஸ் வைத்து நடத்தி வருவதாகவும், இதற்கு முன்பு, சம்பவ சமயத்தில் ரத்தினா குளோபல் மருத்துவமனைக்கு சொந்தமான சத்யம் ஆம்புலன்சில் டிரைவராக ஓட்டி வந்ததாகவும், கடந்த 27.04.2021ம் தேதி மாலை 04.45 மணிக்கு பால்பண்ணை பாலத்திற்கு கீழே நின்று கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர், சஞ்சீவி நகரில் ஒரு விபத்து நடந்துவிட்டதாக சொன்னார் என்றும், பின்னர், தான் உடனே சம்பவயிடத்திற்கு சென்று, விபத்தில் அடிப்பட்ட சுயநினைவின்றி இருந்த ஆண் நபரை திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.12) **அ.த.சா.12 அமர்நாத்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது, மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை–1 ஆக திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், திருச்சி வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர், TN 81 X 5803 என்ற வாகனத்தை விபத்தாய்வு செய்ய கொடுத்த வேண்டுகோளின் பேரில், கடந்த 04.05.2021ம் தேதி 13.30 மணிஎளவில் TN 81 X 5803 என்ற இருசக்கர வாகனத்தினை தனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்த போது, வாகனத்தில் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டன என்றும், 1. வாகனத்தின் பின் சக்கரம் வளைந்து இருந்தது என்றும், பின்பக்கபாடி உடைந்திருந்தது என்றும், ஹாண்டில் பார் மற்றும் போர் வளைந்திருந்தது என்றும், வாகனத்தை நின்ற நிலையில் ஆய்வு செய்த போது, கைத்தடைத்திறன் மற்றும் கால்தடைத்திறன் திருப்திகரமாக இருந்து என்றும், மேற்கண்ட விபத்திற்கு இயந்திரக்கோளாறு ஏதும் காரணம் இல்லை என சான்றழிக்கப்பட்டது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் TN 81 X 5803 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை தான் வழங்கியது தான், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், இதே வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 02 BT 8347 என்ற ஆம்னி பேருந்தை ஆய்வு செய்ததாகவும், 30.04.2021 அன்று மதியம் 13.30 மணியளவில் தனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்த போது, வாகனத்தில் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டனஎன்றும்,1. பிரண்ட் கிரில் சேதடைந்து காணப்பட்டது என்றும், வானத்தின் கைத்தடைத்திறன் மற்றும் கால்தடைத்திறன் திருப்திகரமாக இருந்து என்றும், விபத்தானது இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றழித்ததாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் TN 02 BT 8347 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை தான் வழங்கியது தான், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.13) **அ.த.சா.13 பாபு** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சியில் வசித்து, ஆட்டோ டிரைவராக வேலை பார்த்து வருவதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், கடந்த 27.04.2021ம் தேதியன்று இரவு 08.00 மணிக்கு சஞ்சீவி நகரில் நான் டீக் குடிப்பதற்காக சென்றிருந்தபோது, போலிசார் அங்கு விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அங்கு நடந்த ஒரு விபத்து சம்பந்தமாக, போலிசார் விசாரித்து, படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.14) **அ.த.சா.14 ஜெயா** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதகாவும், கடந்த 27.04.2021ம் தேதியன்று திருச்சி மாநகர காவல் கட்டுப்பாட்டு அறை காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையத்தின் கூடுதல் பொறுப்பு வகித்ததாகவும், அன்றையதினம், வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. உமா சங்கரி என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, வின்சென்ட் பால்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, நிலையக் குற்ற எண்.73/2021, ச/பி.279, 337, 304A இதச பிரிவுகளின் கீழாக 27.04.2021ம் தேதி 19.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை, தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 27.04.2021ம் தேதி 20.00 மணிக்கு சாட்சிகள் பாபு, சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடமான சஞ்சீவி நகர் சந்திப்பில், திருச்சி – சென்னை பைபாஸ் சாலையில் உள்ள சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பங்கள் பெற்றதாகவும், பின்னர், சாட்சிகள் வின்சென் பால்ராஜ், பாபு, சரவணன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், பின்னர், 28.04.2021ம் தேதியன்று

திருச்சி அரசு மருத்துவமனை சவகிடங்கில் வைக்கப்பட்டிருந்த, இவ்வழக்கின் விபத்தில் காயம்பட்டு இறந்துபோன சார்லஸ் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில், காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னர், சாட்சிகள் ஜோ பிராங்க்ளின், அந்தோணி துரை, ஜான் பீட்டர், ஸ்டெல்லா மேரி ஆகியோர விசாரித்து, வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், பின்னர், சாட்சி வின்சன் பால்ராஜ் என்பவரை மீண்டும் விசாரித்து, மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவரது வாக்குமூலத்தில், சார்லஸ் என்பவருக்கு மரணம் ஏற்பட்ட இடமான திருச்சி – சென்னை பைபாஸ் ரோடு, சஞ்சீவி நகர் ஜங்சன் ரோடு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் கடந்து சென்றுவரும் பகுதி என்பதனை, மரணம் ஏற்படும் பகுதி என்றும் விளம்பர பலகை மற்றும் பேரிகார்டு reflective sticker ஒட்டப்பட்டு, கவனித்து செல்ல வேண்டி, மஞ்சள் ஒளி தரும் விளக்கு எரியவிடப்பட்டும் மாநகர எல்லைக்குள் 40 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டும் என்ற விதிமுறைகள் தெரிந்தும், TN 02 BT 8347 AVK என்ற எண் உள்ள ஆம்னி பஸ் டிரைவர் மணிகண்டன் விபத்து ஏற்படுத்தினால், மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்தே சாலை விதிமுறைகளை மீறி, அதிவேகமாகவும், அசட்டையாகவும் ஆம்னி பஸ்ஸை ஓட்டி, ரோட்டின் இடதுபுற ஓரத்தில் TN 81 BT 5803 என்ற பதிவெண் கொண்ட Passion Pro வாகனத்தில் சார்லஸ் என்பவர் அவரது மகள் ரோஸ்லின் அன்னாள் என்பவரை உட்கார வைத்துக்கொண்டு சாலையை கடப்பதற்காக வாகனத்தில் நின்று கொண்டிருந்தவர் மீது மோதி, ரோஸ்லின் என்பவருக்கு வலது காலில் பலத்த காயத்தையும், சார்லஸ் என்பவருக்கு மரணத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்று தெரிவித்துள்ளார் என்றும், மேலும், வழக்கில் இறந்துபோன சார்லஸ் என்பவரின் இறப்பின் உண்மையான காரணம் அறியும்பொருட்டு, பிரேத விசாரணை செய்ய வேண்டி, பிரேத வழிக்காவலாக தலைமைக் காவலர் 484 பாரதிராஜா என்பவரை நியமித்து, கி.ஆ.பெ.வி.அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன் என்றும், பின்னர், சாட்சி ரோஸ்லின் அன்னாள் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர், புகார்தாரரின் மறுவாக்குமூலத்தின் அடிப்படையில், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337

மற்றும் 304A இதச என்பதில் இருந்து, ச/பி.279, 337, 304(2) என்பதாக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், பின்னர், 29.04.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 02 BT 8347 என்ற ஆம்னி வண்டியின் ஓட்டுநர் மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜரானவரிடம், கைதுக்கான காரணம் கூறி கைது செய்ததாகவும், பின்னர், அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தாமஸ் மற்றும் ஆரோக்கிய ஜான்பீட்டர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, சாட்சிகளின் கையொப்பங்கள் பெற்றதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி "என்னை தாங்கள் நான் சொல்லும் இடம் அழைத்து சென்றால், xxxx என்ற இடத்தைை அடையாளம் காட்டியும், நான் ஓட்டி வந்து xxx ஏற்படுத்திய TN 02 BT 8347 AVK ஆம்னி பஸ் இருக்கும் இடத்தை அடையாளம் காட்டி, பஸ்ஸை தங்களிடம் ஆஜர் செய்வேன்" என்பதாகும் என்றும், பின்னர், எதிரி எடுத்து ஆஜர் செய்த வாகனமான TN 02 BT 8347 என்ற ஆம்னி வாகனத்தை எதிரி அடையாளம் காட்ட அப்பல்லோ மருத்துவமனைக்கு அருகில் உள்ள ராணி பார்க்கிங் எனும் இடத்தில் இருந்து காலை 08.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் இருவரது முன்னிலையில், கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றி, சாட்சிகளின் கையொப்பங்கள் பெற்றதாகவும், பின்னர், எதிரியை நிலையம் கொண்டு வந்து, தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினதாகவும், பின்னர், இவ்வழக்கில் விபத்திற்குள்ளான வாகனமான TN 81 BT 5803 என்ற பதிவெண் கொண்ட Passion Pro என்ற வாகனத்தை வழக்கின் புகார்தாரர் நிலையத்தில் ஆஜர் செய்ததை காலை 09.15 மணிக்கு படிவம் 91ன் மூலம் கைப்பற்றினதாகவும், பின்னர், விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான வாகனம் ஆகியவற்றை விபத்தாய்வு செய்ய வேண்டி, திருச்சி கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினதாகவும், பின்னர், இறந்துபோன சார்லஸ் என்பவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து, உடலை சவகிடங்கிற்கு அனுப்பிய மருத்துவர் அஷ்ரப் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து விபத்து பதிவேடு பெற்றதாகவும், பின்னர், வழக்கில் இறந்த நபரின் உடலை பிரேத பரிசோதனை செய்த

மருத்துவர் திருமதி.கனகஸ்ரீ என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், பின்னர், அங்கமுத்து, சத்தியமூர்த்தி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், பின்னர், விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்து, சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. அமர்நாத் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து மேற்படி வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றதாகவும், பின்னர், 22.06.2021ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு சிகிச்சையளித்து, காயச்சான்று வழங்கிய GVN மருத்துவமனை மருத்துவர் நடராஜன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றதாகவும், மேற்படி மருத்துவரின் காயச்சான்றிதழில் ரோஸ்லின் அன்னாளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் இருந்து முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், மேல் சிகிச்சைக்காக அவர்களது மருத்துவமனைக்கு வந்தவருக்கு சிகிச்சை அளித்ததாகவும் கூறியுள்ளார் என்றும், மேலும், அட்லஸ் மருத்துவமனையில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் சுப்பிரமணியம் என்பவரை விசாரித்தபோது, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றினை பெற்றதாகவும், பின்னர், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட விபத்து ஏற்படுத்திய TN 02 BT 8347 AVK ஆம்னி பஸ் மற்றும் விபத்துக்குள்ளான TN 81 BT 5803 என்ற பதிவெண் கொண்ட Passion Pro இருசக்கர வாகனம் ஆகிய இரு வாகனங்களையும் இரண்டு படிவம் 91ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர், பிரேத வழிக்காவல் செய்த தலைமைக் காவலர் 484 பாரதிராஜா என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர், இவ்வழக்கில் விபத்தில் காயம்பட்ட ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழின் அடிப்படையில், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337, 304(ii) இதச என்பதில் இருந்து, 279, 338, 304A இதச பிரிவுகளாக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணை முடித்துக் கொண்டு, எதிரிக்கு எதிராக ச/பி.279,

338, 304A இதச பிரிவுகளின் கீழாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.15) **அ.த.சா.15 நடராஜன்** என்பவர் தனது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சியில் வசித்து, சிங்காரத்தோப்பில் உள்ள GVN மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 24.07.2021ம் தேதி இரவு 09.30 மணியளவில் நான் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, காமராஜ் தெரு, வடக்கு துவாக்குடிமலை, திருச்சி என்ற விலாசத்தில் வசிக்கும் ரோஸ்லின் அன்னாள் (வயது 19), த/பெ.சார்லஸ் என்பவர் வாகன விபத்து சம்பந்தமாக அட்லஸ் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல் சிகிச்சைக்காக தங்கள் மருத்துவமனைக்கு வந்திருந்தார் என்றும், மேற்படி ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு ஏற்பட்ட FEMUR FRACTURE RIGHT HIP காயம் கொடுங்காயம் என்று தான் சான்று வழங்கினதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள காயச்சான்றிதழ் தான் வழங்கியது தான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழான விசாரணை :**

அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் எதிரிக்கு பாதகமான சங்கதிகள் தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ)ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சிகள் என மறுத்துவிட்டார். தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் சாட்சியங்கள் இல்லை எனக் கூறி தனது தரப்பை முடித்துக்கொண்டார்.

**7) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

8) <u>தீர்க்கப்படவேண்டிய பிரச்சனை</u>

1. அரசுதரப்பில் ச/பி. 279, 338, 304(A) இதச பிரிவுகளின் கீழான உட்கூறுகள் தகுந்த சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா?

2. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா ? என்பதே ஆகும்.

**<u>9.பிரச்சனைக்கான தீர்வு:</u>**

இந்திய தண்டனை சட்டப்பிரிவு 279 என்பது **"ஒரு நபர் பொது வழிசாலையில், அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும், பொது மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும் வாகனத்தை இயக்குவது ஒரு குற்றம்"** என்றும், அதற்கான தண்டனை குறித்தும் எடுத்து உரைக்கிறது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 338 என்பது **"மனித உயிருக்கு அபாயத்தை உண்டாகும் விதத்தில் அல்லது பிறருடைய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் முறையில் அசட்டுத் துணிச்சலுடன் அல்லது கவனக்குறைவாக செய்யப்படும், எந்தச் செயலினாலாவது, யாருக்காவது கொடுங்காயம் ஏற்பட்டால், அந்தச் செயலைப்புரிந்த நபருக்கு 2 ஆண்டுகள் வரை சிறைக்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்."** என்று எடுத்துரைக்கிறது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 304A என்பது **"ஒரு நபர் கவனக்குறைவாகவோ அல்லது விபரீதமாகவோ செய்த செயலினால் மற்றொரு நபர் இறந்துவிட்டால் அது ஒரு குற்றம்"** என்றும் எடுத்துரைக்கிறது.

**9.1) அரசுதரப்பில் ச/பி. 279, 338, 304(A) இதச பிரிவுகளின் கீழான உட்கூறுகள் தகுந்த சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா?**

இவ்வழக்கின் விபத்து சம்பவத்தின் தொடர்ச்சியாக சார்லஸ் என்பவர் இறந்துள்ளதாகவும், ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான வின்செண்ட் பால்ராஜ் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை உறுதி செய்யும் விதமாக, இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட அ.த.சா.8 உமாசங்கரி

என்பவர் தனது சாட்சியத்தில், *'கடந்த 27.04.2021 அன்று நான் திருச்சி மாநகர வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, இன்னாசி மகன் வின்செண்ட் பவுல்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.73/2021, ச/பி.279, 337, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்பு வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.'* என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.த.சா.8 உமாசங்கரி என்பவரது சாட்சியத்தில் இருந்து அ.த.சா.1 கொடுத்த புகாரின் பேரிலாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பானது காவல் ஆய்வாளரான அ.த.சா.14 ஜெயா என்பவரது வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

9.2) வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் அ.த.சா.14 ஜெயா தனது சாட்சியத்தில், *'நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 27.04.2021ம் தேதி 20.00 மணிக்கு சாட்சிகள் பாபு, சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடமான சஞ்சீவி நகர் சந்திப்பில், திருச்சி – சென்னை பைபாஸ் சாலையில் உள்ள சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பங்கள் பெற்றேன்.'* என்று சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் விபத்து சம்பவம் நடந்த இடத்தை பாபு மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாக கூறியுள்ள நிலையில், மேற்படி பாபு என்பவர் அ.த.சா.13 ஆகவும், சரவணன் என்பவர் அ.த.சா.9 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

9.3) பார்வை மகஜர் சாட்சியான அ.த.சா.9 சரவணன் என்பவர் தனது சாட்சியத்தில், *'சுமார் நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு, சஞ்சீவி நகர் பைபாஸ் ரோட்டில் மாலை 04.30 மணிபோல வந்து கொண்டிருந்தபோது, அங்கு கும்பலாக இருந்ததை பார்த்து, அங்கு சென்று பார்த்தபோது, அங்கு விபத்து நடந்திருந்தது. விபத்தில் காயம்பட்டு இறந்துபோன நபரை ஆம்புலன்ஸில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். போலிசார் எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் செய்து கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில்*

***உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான்.'*** என்று சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ள நிலையில், அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, ***'போலிசார் விசாரணையின்போது, சம்பவயிடத்தில் நான் நின்றுகொண்டிருந்தபோது, போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு, வரைபடம் வரைந்து எங்களிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.'*** என்று சாட்சியமளித்திருப்பதால், அவரது சாட்சியம் ஏற்கும் வகையிலேயே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9.4) மேலும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.த.சா.13 பாபு என்பவர் தனது சாட்சியத்தில், ***'கடந்த 27.04.2021ம் தேதியன்று இரவு 08.00 மணிக்கு சஞ்சீவி நகரில் நான் டீக் குடிப்பதற்காக சென்றிருந்தபோது, போலிசார் அங்கு விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அங்கு நடந்த ஒரு விபத்து சம்பந்தமாக, போலிசார் விசாரித்து, படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன்.'*** என்று சாட்சியமளித்துள்ளார்.

9.5) இவ்வாறாக, பார்வை மகஜர் சாட்சிகளான அ.த.சா.9 சரவணன் மற்றும் அ.த.சா.13 பாபு ஆகியோரது சாட்சியங்களின் வாயிலாக, புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.14 ஜெயா என்பவர் இவ்வழக்கு விபத்தின் சம்பவயிடத்தை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளின் கையொப்பங்கள் பெற்றுள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

9.6) அதன் தொடர்ச்சியாக, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.14 ஜெயா என்பவர் தனது சாட்சியத்தின் போது, ***"28.04.2021ம் தேதியன்று திருச்சி அரசு மருத்துவமனை சவகிடங்கில் வைக்கப்பட்டிருந்த, இவ்வழக்கின் விபத்தில் காயம்பட்டு இறந்துபோன சார்லஸ் என்பவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில், காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, அறிக்கை தயார் செய்தேன்.'*** என்று கூறியுள்ள நிலையில், மேற்படி பிரேத விசாரணை அறிக்கையானது அ.த.சா.ஆ.14 ஆக அரசுதரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9.7) மேலும், அ.த.சா.14 தனது சாட்சியத்தில், ***'வழக்கில் இறந்துபோன சார்லஸ் என்பவரின் இறப்பின் உண்மையான காரணம் அறியும்பொருட்டு, பிரேத விசாரணை செய்ய வேண்டி, பிரேத வழிக்காவலாக தலைமைக் காவலர் 484 பாரதிராஜா என்பவரை நியமித்து, கி.ஆ.பெ.வி.அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்னர், சாட்சி ரோஸ்லின் அன்னாள் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். .. .. .. .. பின்னர், வழக்கில் இறந்த நபரின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி.கனகஸ்ரீ என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.'*** என்று சாட்சியமளித்துள்ள நிலையில், விபத்தில் இறந்து போன சார்லஸ் என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவரான கனகஸ்ரீ என்பவர் அ.த.சா.10 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அ.த.சா.10 தனது சாட்சியத்தில், ***".. .. .. திருச்சி வடக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையக் குற்ற எண்.73/2021 என்ற வழக்கில் சம்பந்தப்பட்டு, இறந்துபோன 50 வயது மதிக்கத்தக்க சார்லஸ் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று, தலைமைக் காவலர் HC 484 P.பாரதிராஜா என்பவர் பிரேதத்தை அடையாளம் காண்பிக்க, அதன் அங்க மச்ச அடையாளங்களை குறித்துக் கொண்டு, அதே தினம் முற்பகல் 11.50 மணிக்கு, பிரேத பரிசோதனையை துவங்கினேன்."*** என்றும், ***".. .. .. இறந்த நபரானவர், அவருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களினால் இறந்திருக்கக் கூடும் என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 28.04.2021 தேதியிட்ட PM.No.689/2021 என்ற சார்லஸ் என்பவருக்கு நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.'*** என்றும் சாட்சியமளித்து, புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.14 ஜெயா என்பவரது சாட்சியத்தின்படியான சங்கதிகளை உறுதி செய்துள்ளார்.

9.8) அ.த.சா.14 ஜெயா தனது சாட்சியத்தில், ***'29.04.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 02 BT 8347 என்ற ஆம்னி வண்டியின் ஓட்டுநர் மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜரானவரிடம், கைதுக்கான காரணம் கூறி கைது செய்தேன். பின்னர், அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தாமஸ் மற்றும் ஆரோக்கிய ஜான்பீட்டர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து, சாட்சிகளின் கையொப்பங்கள் பெற்றேன்.'*** என்று சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்படி

தாமஸ் என்பவர் அ.த.சா.6 ஆகவும், ஆரோக்கிய ஜான்பீட்டர் என்பவர் அ.த.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

9.9) மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.த.சா.4 ஜான்பீட்டர் மற்றும் அ.த.சா.6 தாமஸ் ஆகியோர் தங்களது சாட்சியங்களில், எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் குறித்து எந்தவித சங்கதிகளையும் தெரிவிக்கவில்லை. மாறாக, விபத்து சம்பவம் குறித்து கேள்விப்பட்டது குறித்தும், மருத்துவமனை சென்றது குறித்தும், சார்லஸ் என்பவர் இறந்தது குறித்து மட்டுமே சாட்சியமளித்துள்ளார்கள். எனவே, மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சியங்களின் சாட்சியங்களில் இருந்து விபத்து சம்பவம் நடந்தது மட்டுமே உறுதியாகியுள்ளதால், அவர்களின் சாட்சியங்கள் அரசுதரப்பிற்கு பாதகமாகவோ, சாதகமாகவோ அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்வதால், அவர்களது சாட்சியங்கள் மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படவில்லை.

9.10) புலன் விசாரணை அதிகாரியான அ.த.சா.14 ஜெயா மேற்கொண்டு தனது சாட்சியத்தில், ***'விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான வாகனம் ஆகியவற்றை விபத்தாய்வு செய்ய வேண்டி, திருச்சி கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். .. .. .. .. ..விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்து, சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. அமர்நாத் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் இருந்து மேற்படி வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன்.'*** என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்படி வாகனங்களை விபத்தாய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் அமர்நாத் என்பவர் அ.த.சா.12 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் தனது சாட்சியத்தில், ***'மேற்கண்ட விபத்திற்கு இயந்திரக்கோளாறு ஏதும் காரணம் இல்லை என சான்றழிக்கப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் TN 81 X 5803 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை நான் வழங்கியது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். .. .. .. .. விபத்தானது இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றழித்தேன். தற்போது***

***என்னிடம் காட்டப்படும் TN 02 BT 8347 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை நான் வழங்கியது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்."*** என்றும் சாட்சியமளித்துள்ளதில் இருந்து, விபத்துக்குள்ளான இரண்டு வாகனங்களிலும் இயந்திரக் கோளாறுகள் இல்லை என்றும், வாகனத்தின் இயந்திரக்கோளாறுகளினால் விபத்து ஏற்படவில்லை என்பதும் உறுதியாகியுள்ளது.

9.11) அ.த.சா.14 ஜெயா மேலும் தனது சாட்சியத்தில், ***"22.06.2021ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு சிகிச்சையளித்து, காயச்சான்று வழங்கிய GVN மருத்துவமனை மருத்துவர் நடராஜன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றேன். மேற்படி மருத்துவரின் காயச்சான்றிதழில் ரோஸ்லின் அன்னாளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், திருச்சி அட்லஸ் மருத்துவமனையில் இருந்து முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், மேல் சிகிச்சைக்காக அவர்களது மருத்துவமனைக்கு வந்தவருக்கு சிகிச்சை அளித்ததாகவும் கூறியுள்ளார்.'*** என்று சாட்சியமளித்துள்ள நிலையில், மேற்படி நடராஜன் என்பவர் இவ்வழக்கில் அ.த.சா.15 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ***'கடந்த 24.07.2021ம் தேதி இரவு 09.30 மணியளவில் நான் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, காமராஜ் தெரு, வடக்கு துவாக்குடிமலை, திருச்சி என்ற விலாசத்தில் வசிக்கும் ரோஸ்லின் அன்னாள் (வயது 19), த/பெ.சார்லஸ் என்பவர் வாகன விபத்து சம்பந்தமாக அட்லஸ் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு வந்திருந்தார். மேற்படி ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு ஏற்பட்ட FEMUR FRACTURE RIGHT HIP காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள காயச்சான்றிதழ் நான் வழங்கியது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.'*** என்று சாட்சியமளித்துள்ளார்.

9.12) அ.த.சா.15 நடராஜன் என்பவரால் ரோஸ்லின் அன்னாளுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ-22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆவணத்தின் வாயிலாக, ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது உறுதியாகியுள்ளது.

9.13) மேலே செய்யப்பட்ட ஒட்டுமொத்த பரிசீலனைகளின் வாயிலாக, 27.04.2021ம் தேதியன்று திருச்சி - சென்னை பைபாஸ் சாலையில் சர்வீஸ் ரோட்டில் நடந்த விபத்தில், சார்லஸ் மற்றும் ரோஸ்லின் அன்னாள் ஆகியோர் சென்ற இருசக்கர வாகனமானது விபத்துக்குள்ளாகி, அதன் மூலம் ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு கொடுங்காயமும், சார்லஸ் என்பவருக்கு உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது என்பது நிரூபணம் ஆகியுள்ளது.

**10. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா ?**

இவ்வழக்கின் விபத்து சம்பவம் நடந்தது குறித்து இந்நீதிமன்றத்திற்கு எவ்வித சந்தேகமும் எழாத நிலையில், விபத்தில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களின் இயந்திரக் கோளாறுகளினாலும் வழக்கு விபத்து நடக்கவில்லை என்பது மோட்டார் வாகன ஆய்வாளரின் சாட்சியத்தில் இருந்தும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளில் இருந்தும் தெளிவாக புலனாகியுள்ளதால், யாருடைய கவனக்குறைவினால் இந்த விபத்து என்பது குறித்த தெளிவுறுத்தும் வகையில் அரசுதரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்படுகிறது.

**<u>11) எதிரியின் அடையாளம் குறித்த பரிசீலனை :</u>**

11.1) இவ்வழக்கு விபத்து சமயத்தில், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் TN 02 8347 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி பேருந்தை வழக்கின் எதிரியான மணிகண்டன் என்பவர் தான் ஓட்டிவந்தாரா என்பது குறித்து பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் விபத்து சம்பவம் நடந்த சமயத்தில், சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படும் அ.த.சா.1 வின்சென்ட் பால்ராஜ், அ.த.சா.3 அந்தோணிதுரை மற்றும் விபத்தில் கொடுங்காயம்பட்ட அ.த.சா.5 ரோஸ்லின் அன்னாள் ஆகியோரது சாட்சியங்கள் இவ்வழக்கின் முக்கிய சாட்சியங்களாக கருதப்பட்டு, அவர்களது சாட்சியங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்படுகிறது.

ஏனெனில், மேற்படி சம்பவயிட சாட்சிகளின் வாயிலாக மட்டுமே விபத்து குறித்த உண்மை நிலையை நிரூபணம் செய்ய முடியும்.

11.2) அந்த வகையில், அ.த.சா.1 வின்செண்ட் பால்ராஜ் மற்றும் அ.த.சா.3 அந்தோணிதுரை ஆகியோர் தங்களது சாட்சியங்களில், ***".. .. அந்த பேருந்தின் பதிவெண் TN 02 8347 என்றிருந்தது. அந்த பேருந்தை ஓட்டிய நபரை விபத்து சமயத்தில் நான் பார்த்தேன். அவருடைய பெயர் மணகண்டன் என்று தெரிந்துகொண்டேன். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். அவர் ஆஜர் எதிரிதான்.."*** என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அ.த.சா.5 ரோஸ்லின் அன்னாள் தனது சாட்சியத்தில், ***"விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்திய பேருந்தின் பதிவேண்-ஐ பார்த்தேன். TN 02 BT 8347 என்றிருந்தது. AVK டூரிஸ்ட் பஸ் என்று எழுதியிருந்தது. அந்த பேருந்தை ஓட்டிய நபரை நான் பார்த்தேன். அவருடைய பெயர் மணிகண்டன் என்று தெரிந்துகொண்டேன். அவர் ஆஜர் எதிரிதான்."*** என்று சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில், எதிரியின் அடையாளம் குறித்து எதிரிதரப்பில் மறுத்தளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

11.3) மேற்படியான சம்பவயிட சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக, சம்பவ சமயத்தில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் TN 02 8347 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி பேருந்தை வழக்கின் எதிரியான மணிகண்டன் என்பவர் தான் ஓட்டிவந்துள்ளார் என்பது நிரூபணம் ஆகியுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>12) அதிவேகம் (Rash) மற்றும் அஜாக்கிரதை (Negligence) :</u>**

| |
|---|
| இந்திய தண்டனை சட்டப்பிரிவு 279 என்பது **"ஒரு நபர் பொது வழிசாலையில், அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும், பொது மக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலும் வாகனத்தை இயக்குவது ஒரு குற்றம்"** என்றும், அதற்கான தண்டனை குறித்தும் எடுத்து உரைக்கிறது. |

12.1) எதிரியானவர் சம்பவ சமயத்தில் பொதுவழி சாலையில் அதிகவேகமாகவும், கவனக்குறைவாகவும், பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை இயக்கினாரா என்பது குறித்து பரிசீலனை செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

12.2) இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளில் ஒருவரான இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.த.சா.1 வின்சென்ட் பால்ராஜ் தனது சாட்சியத்தில், ***"ஓயாமாரி சர்வீஸ் ரோட்டில் எனது அண்ணனும், அண்ணன் மகளும் எங்ளுக்கு முன்னால் இரு சக்கர வாகனத்திலும், நானும், எனது நண்பரும் அவர்களுக்கு பின்னால் இருசக்கர வாகனத்திலும் சென்று சஞ்சீவி நகர் அருகே ரோட்டை கடப்பதற்காக சாலையின் வலதுபுறமிருந்து எதிர் திசைக்கு கடக்க நால்ரோடு பிரிவு ரோட்டில் நின்று கொண்டிருந்தோம். அப்போது ஆம்னி பேருந்து சென்னைக்கு செல்வதற்காக சென்னை நோக்கி வேகமாக தடுப்பு இருக்கும் இடத்தில் நிற்காமல் வேகமாக வந்து எனது அண்ணனின் வாகனத்தின் முன்புறம் மோதி விபத்து ஏற்பட்டது."*** என்று சாட்சியமளித்துள்ளார்.

12.3) மற்றொரு சம்பவயிட சாட்சியான கண்ணுற்ற சாட்சி அ.த.சா.3 அந்தோணிதுரை என்பவர் தனது சாட்சியத்தில், ***"ஓயாமாரி சர்வீஸ் ரோட்டில் சார்லஸ்ம் அவரது மகளும், எங்களுக்கு முன்னால் இருசக்கர வாகனத்திலும், நானும், அ.த.சா.1ம் அவர்களுக்கு பின்னால் இருசக்கர வாகனத்திலும், சென்று சஞ்சீவி நகர் அருகே ரோட்டை கடப்பதற்காக சாலையின் வலதுபுறமிருந்து எதிர்திசைக்கு கடக்க நால்ரோடு பிரிவு ரோட்டில் மாலை 04.30 மணியளவில் நின்று கொண்டிருந்தோம். அப்போது ஆம்னி பேருந்து சென்னைக்கு செல்வதற்காக சென்னை நோக்கி வேகமாக தடுப்பு இருக்கும் இடத்தில் நிற்காமல் வேகமாக வந்து சார்லஸ்ன் வாகனத்தின் முன்புறம் மோதி விபத்து ஏற்பட்டது. சார்லஸ்ம் அவரது மகளும், பேருந்து இடித்தவுடன் சார்லஸ்ஐ அந்த பேருந்து சிறிது தூரம் இழுத்து சென்றது.. .. .. "*** என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.4) அ.த.சா.5 ரோஸ்லின் அன்னாள் என்பவர் தனது சாட்சியத்தில், ***".. .. நானும், எனது அப்பாவும், ஒரு இருசக்கர வாகனத்திலும், வின்சென்ட் பால்ராஜ், அந்தோணி துரைராஜ்***

***ஆகிய இருவரும் மற்றொரு இருசக்கர வாகனத்திலும், நானும், அப்பாவும், முன்னே செல்ல அவர்கள் எங்களுக்கு பின்னால் வந்துகொண்டிருந்தார்கள். எனது அப்பா வாகனத்தை ஓட்டினார், நான் பின்னால் அமர்ந்து சென்று நாங்கள் சஞ்சீவி நகர் அருகில் சாலையை கடப்பதற்கு நின்றுகொண்டிருந்தபோது, ஏவிகே என்ற டூரிஸ்ட் பேருந்து சென்னை நோக்கி வேகமாக வந்து எங்கள் வாகனத்தில் மோதி எனது அப்பாவை இழுத்துகொண்டு சிறிது தூரம் சென்றது. .. .. "*** என்று சாட்சியமளித்துள்ளார்.

12.5) இவ்வழக்கில் கொடுங்காயம்பட்ட அ.த.சா.5 ரோஸ்லின் அன்னாள் தனக்கு இவ்வழக்கு விபத்து சம்பவத்தால் ஏற்பட்ட காயமானது எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றியும், குற்ற சம்பவம் எங்கு, எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்தும் தெளிவாக நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்கண்ட சாட்சி சிறந்த சாட்சியாக (Best Witness) கருதப்பட்டு, அவரின் சாட்சியத்திற்கு அதிக மதிப்பீடு கொடுத்து, எதிரிக்கு எதிராக வழக்கினை நிரூபணம் செய்ய இயலும் என்பது குற்றவியல் சட்டத்தின் நிலைப்பாடு.

12.6) மேற்படி கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து, எதிரியானவர் ஓட்டி வந்த வாகனத்தை வேகமாகவும், தடுப்பு இருக்கும் இடத்தில் நிற்காமல் வேகமாகவும் சென்றுள்ளார் என்பது தெரியவருகிறது.

12.7) இவ்வழக்கின் மாதிரி வரைபடத்தை பரிசீலனை செய்கையில், விபத்து சம்பவமானது திருச்சி – சென்னை சாலையில் உள்ள சஞ்சீவி நகர் சந்திப்பு நால்ரோடு பிரிவு ரோட்டில் நடந்துள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி சாலையில், சர்வீஸ் ரோடு மற்றும் மெயின் ரோடு இணையும் இடமாக உள்ளது. மேலும், அந்த சாலையானது வாகனங்கள் வேகமாக செல்லவதற்கான சாலையல்ல. அந்த சந்திப்பு ரோட்டில் செல்லக்கூடிய வாகனங்கள் வேகத்தை குறைத்து செல்ல வேண்டியது அவசியம். அந்த சாலையில் 40 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டும் என்பது விதி. ஆனால், இந்த வழக்கில் எதிரியானவர் 40 கி.மீ வேகத்தில் செல்லவில்லை என்பது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து தெரிய வருகிறது. ஏனெனில், விபத்து

ஏற்பட்டவுடன், விபத்து ஏற்படுத்திய பேருந்து சார்லஸ் என்பவரை சிறிது தூரம் இழுத்து சென்றுள்ளது என்பது மேற்படி சாட்சியங்களில் இருந்து தெரிய வருகிறது.

12.8) மேலும், மேற்படி சாலையில் எதிரி வந்த திசையில் தடுப்புக் கட்டை அருகே வாகனங்கள் வேகமாக வருவதை தடுக்கும் பொருட்டு, இரண்டு பேரிகார்டுகள் வைக்கப்பட்டிருந்தது தெரிய வருகிறது. இது போன்று இரண்டு பேரிகார்டுகள் வைக்கப்பட்டிக்கும் இடங்களில் மக்கள் பொதுவாக வேகமாக வளைந்து செல்வது வழக்கமாக கொண்டிருக்கிறார்கள் என்பதால், இவ்வழக்கின் சம்பவயிடத்தில் எதிரி வந்த திசையில் இரண்டு பேரிகார்டுகள் இருந்ததால் மட்டுமே எதிரி மெதுவாக தான் வந்திருப்பார் என்று அனுமானம் செய்ய இயலாது.

12.9) இவ்வாறாக, இவ்வழக்கின் முக்கிய சாட்சியங்களாக விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளான அ.த.சா.1, அ.த.சா.3 மற்றும் அ.த.சா.5 ஆகியோரது சாட்சியங்களின் மூலம் எதிரியானவர் ஓட்டி வந்த விதம் அதிவேகமாகவும் (Rash), அஜாக்கிரதையாகவும் (negligence) இருந்துள்ளது என்பது நிரூபணம் ஆகியுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>13.சார்லஸ் என்பவரின் இறப்பிற்கான காரணம் :</u>**

| |
|---|
| இந்திய தண்டனை சட்டப்பிரிவு 304A என்பது **"ஒரு நபர் கவனக்குறைவாகவோ அல்லது விபரீதமாகவோ செய்த செயலினால் மற்றொரு நபர் இறந்துவிட்டால் அது ஒரு குற்றம்"** என்றும் எடுத்துரைக்கிறது. |

13.1) எதிரியானவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து, எதிரியின் கடுமையான அலட்சியத்தால் மட்டுமே விபத்து ஏற்பட்டு, அதன் வாயிலாக இறப்பினை ஏற்படுத்தியிருந்தால் மட்டுமே இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் எதிரி மீதான குற்றத்தோடு பொருந்தும். மேலும், எதிரியானவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்பதனை நிரூபணம் செய்வதோடு

மட்டுமல்லாமல், மேற்படி அதிவேகம் மற்றும் அஜாக்கிதையால் தான் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதனையும் நிரூபணம் செய்யவேண்டியது அரசு தரப்பின் கடமையாகும்.

13.2) இந்நிலையில், இவ்வழக்கின் முக்கிய சாட்சியங்களாக விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளான அ.த.சா.1, அ.த.சா.3 மற்றும் அ.த.சா.5 ஆகியோரது சாட்சியங்களின் மூலம் எதிரியானவர் ஓட்டி வந்த விதம் அதிவேகமாகவும் (Rash), அஜாக்கிரதையாகவும் (negligence) இருந்தது என்ற பொருண்மைகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்துவிட்ட நிலையில், எதிரியானவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் நடந்த விபத்தின் காரணமாக தான் சார்லஸ் என்பவருக்கு உயிரிழப்பு ஏற்பட்டது என்பதனை நிரூபணம் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

13.3) அந்த வகையில், அ.த.சா.3 அந்தோணி துரை என்பவரது குறுக்கு விசாரணை சமயத்தில், ***"சம்பவம் நடந்து அரை மணிநேரத்தில் போலிசார் வந்துவிட்டார்கள் என்றால், அரை மணிநேரத்திற்குள் வந்துவிட்டார்கள். அவர்கள் வந்து தான் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்தது என்றால், சரிதான். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து எவ்வளவு நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்தது என்றால், போலிசார் வந்து கால் மணிநேரத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்தது."*** என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி சங்கதிகளில் இருந்து, விபத்து நடந்து 30 – 45 நிமிடங்களுக்குள் போலிசார் மற்றும் ஆம்புலன்ஸ் சம்பவயிடத்திற்கு வந்துள்ளது தெரிய வருகிறது.

13.4) ஆம்புலன்ஸ் மூலமாக சார்லஸ் என்பவர் திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு மருத்துவர் பரிசோதித்துவிட்டு, வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறியுள்ளதாக அரசுதரப்பு சாட்சியங்கள் சாட்சியமளித்துள்ளார்கள். மேலும், இறந்த சார்லஸ் என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரான அ.த.சா.10 கனகஸ்ரீ தனது சாட்சியத்தில், "***இறந்த நபரானவர், அவருக்கு ஏற்பட்ட***

***பலதரப்பட்ட காயங்களினால் இறந்திருக்கக் கூடும் என்று சான்று வழங்கினேன்.***" என்று சாட்சியமளித்துள்ளார்.

13.5) விபத்து ஏற்பட்ட 30 – 45 நிமிடங்களுக்குள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியிலேயே சார்லஸ் என்பவர் அவருக்கு ஏற்பட்ட பலதரப்பு காயங்களினால் உயிரிழந்துள்ளதால், வழக்கு விபத்து சம்பவத்தின் வீரியத்தால் மட்டுமே சார்லஸ் என்பவர் உயிரிழந்துள்ளார் என்பது புலப்படும் காரணத்தினால், எதிரியானவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் தான் சார்லஸ் என்பவருக்கு உயிரிழப்பு ஏற்பட்டது என்பது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து நிரூபணம் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13.6) விபத்து சம்பவயிடமான திருச்சி – சென்னை பைபாஸ் ரோடு, சஞ்சீவி நகர் ஜங்சன் ரோடு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் கடந்து சென்றுவரும் பகுதி என்பதனை, மரணம் ஏற்படும் பகுதி என்றும் விளம்பர பலகை மற்றும் பேரிகார்டு reflective sticker ஒட்டப்பட்டு, கவனித்து செல்ல வேண்டி, மஞ்சள் ஒளி தரும் விளக்கு எரியவிடப்பட்டும் மாநகர எல்லைக்குள் 40 கி.மீ வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டும் என்ற விதிமுறைகள் தெரிந்தும், TN 02 BT 8347 AVK என்ற எண் உள்ள ஆம்னி பேருந்தினை எதிரியாவனர் விபத்து ஏற்படுத்தினால், மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்தே சாலை விதிமுறைகளை மீறி, அதிவேகமாகவும், அசட்டையாகவும் ஆம்னி பஸ்ஸை ஓட்டி, ரோட்டின் இடதுபுற ஓரத்தில் TN 81 BT 5803 என்ற பதிவெண் கொண்ட Passion Pro வாகனத்தில் சார்லஸ் என்பவர் அவரது மகள் ரோஸ்லின் அன்னாள் என்பவரை உட்கார வைத்துக்கொண்டு சாலையை கடப்படதற்காக வாகனத்தில் நின்று கொண்டிருந்தவர் மீது மோதி, ரோஸ்லின் என்பவருக்கு வலது காலில் பலத்த காயத்தையும், சார்லஸ் என்பவருக்கு மரணத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பது அரசுதரப்பில் நம்ப தகுந்த சாட்சியங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13.7) முடிவாக, அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், ஆஜர் எதிரி தான் இந்திய தண்டனை சட்டப்பிரிவு 279ன் கீழாக ஆம்னி பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து, விபத்தை ஏற்படுத்தி, இந்திய தண்டனை சட்டப்பிரிவு 338ன் கீழாக ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், இந்திய தண்டனை சட்டப்பிரிவு 304A பிரிவின் கீழாக சார்லஸ் என்பவரின் உயிரிழப்பிற்கு காரணமாக இருந்துள்ளார் என்பது அரசுதரப்பில் நம்ப தகுந்த சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, எதிரிக்கு எதிரான ச/பி.279, 338, 304A இதச பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை குற்றவாளி என முடிவு செய்து, ச/பி.279 இதச பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதமும், ச/பி.338 இதச பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதமும், மொத்தம் ரூ.2000/- அபராதமும், ச/பி.304A இதச பிரிவின் கீழான குற்றத்திற்கு 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனையும் விதித்து குவிமுச பிரிவு 255(2) இன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

## 14. வழக்கு சொத்து மீதான உத்தரவு :

இவ்வழக்கில் RP.No.69/2021 என்பதாக கைப்பற்றப்பட்ட விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 02 BT 8347 என்ற பதிவெண் கொண்ட AVK Travels ஆம்னி பேருந்து மற்றும் RP.No.82/2021 என்பதாக கைப்பற்றப்பட்ட விபத்துக்குள்ளான வாகனமான TN 81 X 5803 என்ற பதிவெண் கொண்ட Passion Pro இருசக்கர வாகனம் ஆகியவற்றை அவற்றின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை, வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு, அவர்களே வைத்துக்கொள்ள இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**15.எதிரியின் பிணை பத்திரம் மீதான உத்தரவு:**

இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணத்தை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 437–Aன் கீழ் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்கள் அந்த பிரிவில் கூறியுள்ளபடி 6 மாதங்கள் கழித்து தானாக ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் நாள் அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Tmt.M.Anusuruthi,
B.A., B.L., (Hons)

Digitally signed by
Tmt.M.Anusuruthi,
B.A., B.L., (Hons)
Date: 2026.08.14
20:28:17 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திருச்சிராப்பள்ளி

**1. அரசுத்தரப்பு சாட்சிகள்:–**

| அ.த.சா. எண். | – | சாட்சியின் பெயர் | விபரங்கள் |
|---|---|---|---|
| அ.த.சா.1 | – | வின்சென்ட் பால்ராஜ் | கண்ணுற்ற சாட்சி / நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.த.சா.2 | – | ஜோபிராங்ளின் அன்னாள் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.த.சா.3 | – | அந்தோணிதுரை | கண்ணுற்ற சாட்சி |
| அ.த.சா.4 | – | ஜான் பீட்டர் | கேள்விப்பட்ட சாட்சி |
| அ.த.சா.5 | – | ரோஸ்லின் அன்னாள் | கண்ணுற்ற சாட்சி / விபத்தினால் பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.த.சா.6 | – | தாமஸ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.த.சா.7 | – | ஆரோக்கிய ஜான் பீட்டர் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.த.சா.8 | – | உமாசங்கரி | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சாட்சி |
| அ.த.சா.9 | – | சரவணன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.த.சா.10 | – | கனகஸ்ரீ | பிரேத பரிசோதனை மருத்துவர் |
| அ.த.சா.11 | – | சத்தியமூர்த்தி | ஆம்புலன்ஸ் டிரைவர் / விபத்தில் காயம்பட்டவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தவர் |

| | | | |
|---|---|---|---|
| அ.த.சா.12 | – | அமர்நாத் | மோட்டார் வாகன ஆய்வாளர் |
| அ.த.சா.13 | – | பாபு | பார்வை மகஜர் சாட்சி |
| அ.த.சா.14 | – | ஜெயா | புலன் விசாரணை அதிகாரி |
| அ.த.சா.15 | – | நடராஜன் | GVN மருத்துவமனை மருத்துவர் |

**2. அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | | |
|---|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | _ | புகார் | அ.த.சா.1 |
| அ.த.சா.ஆ.2 | – | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.த.சா.6 |
| அ.த.சா.ஆ.3 | – | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.த.சா.6 |
| அ.த.சா.ஆ.4 | _ | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.த.சா.7 |
| அ.த.சா.ஆ.5 | _ | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.த.சா.7 |
| அ.த.சா.ஆ.6 | _ | முதல் தகவல் அறிக்கை | அ.த.சா.8 |
| அ.த.சா.ஆ.7 | _ | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் | அ.த.சா.9 |
| அ.த.சா.ஆ.8 | _ | 28.04.2021 தேதியிட்ட P.M.No.689/2021 என்ற சார்லஸ் என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கை | அ.த.சா.10 |
| அ.த.சா.ஆ.9 | _ | TN 81 X 5803 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.த.சா.12 |
| அ.த.சா.ஆ.10 | _ | TN 02 BT 8347 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.த.சா.12 |
| அ.த.சா.ஆ.11 | _ | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் | அ.த.சா.13 |
| அ.த.சா.ஆ.12 | _ | பார்வை மகஜர் | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.13 | _ | மாதிரி வரைபடம் | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.14 | _ | பிரேத விசாரணை அறிக்கை | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.15 | – | ச/பி.279, 337, 304A இதச என்பதில் இருந்து, ச/பி.279, 337, 304(2) இதச என்பதாக சட்டப்பிரிவு மாற்றம் செய்யப்பட்டதற்கான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.16 | _ | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.17 | _ | கைப்பற்றுதல் மகஜர் | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.18 | _ | விபத்து பதிவேடு | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.19 | _ | TN 02 BT 8347 AVK என்ற ஆம்னி பஸ்ஸிற்கான படிவம் 91 | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.20 | _ | TN 81 X 5803 பதிவெண் கொண்ட Passion Pro இருசக்கர வாகனத்திற்கான படிவம் 91 | அ.த.சா.14 |

| | | | |
|---|---|---|---|
| அ.த.சா.ஆ.21 | – | ச/பி.ச/பி.279, 337, 304(2) இதச என்பதில் இருந்து, ச/பி.279, 337, 304A இதச என்பதாக சட்டப்பிரிவு மாற்றம் செய்யப்பட்டதற்கான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.த.சா.14 |
| அ.த.சா.ஆ.22 | – | ரோஸ்லின் அன்னாள் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள காயச்சான்றிதழ் | அ.த.சா.15 |

**<u>சான்று பொருட்கள் :–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சி :–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சான்றாவணம்:–</u>** இல்லை

Tmt.M.Anusuruthi, B.A., B.L., (Hons)

Digitally signed by Tmt.M.Anusuruthi, B.A., B.L., (Hons)
Date: 2026.08.14 20:28:23 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திருச்சிராப்பள்ளி.

**<u>குறிப்பு</u> :**

1. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.